2020-ம் வருடம் பிப்ரவரி மாதம் 24-ம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சியில் 14-வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலைப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க வேண்டி, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணத் தொகை ரூ.4032/- ஐ பில் படிவம் எண்.7906 நாள்.07.01.2020-ன் படி சென்னை, Bright Advertising நிறுவனத்திற்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி விளம்பர கட்டணத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.16/2020/இ1
தீர்மான எண்.13:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு Rail Internet Connection பயன்பாடு 03.02.2020-ஆம் தேதியுடன் முடிவடைவதால், மேற்படி, Rail Internet Connection தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு இணைப்பினை Renewal செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ14,160/-ஐ ஸ்ரீ பாலாஜி நெட் ஓர்க் இன்ஸ்டலேஷன் ஆம்பூர் என்பவருக்கு வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு:** அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
**ந.க.எண்.133/இ2/2020**
தீர்மான எண்.14:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 13.02.2020-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட் சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | தார்வழி பகுதியில் அமைந்துள்ள நகராட்சி உரகிடங்கில் உரம் தயாரிக்க உரகிடங்கு பகுதியில் அரமக்கப்பட்டுள்ள 1/3 கூரை வின்ரோசில் 14 எண்ணிக்கை உர தொட்டிகள் கட்டுதல். | 9.50 | 1. எம்.தீனதயாளன்<br>2.ஏ.வி.நாகராஜன் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1411/2019/இ1

தீர்மான எண்.15:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 19.02.2020-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட் சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய கட்டிடங்களில் அமைந்துள்ள பொது பிரிவு பொதுசுகாதார பிரிவு ஆகிய கட்டிடங்களில் உள்ள ஜன்னல்கள் பழுதடைந்துள்ளதை சீரமைத்தல், மேற்கூரையில் Pressed Tiles புதியதாக பதித்தல்,பொது பிரிவு முன்புறம் சன்ஷேட் அமைத்தல் மற்றும் கழிவறை கட்டிடம் பராமரிப்பு பணி செய்தல் | 6.50 | 1. எம்.தீனதயாளன்<br><br>2.ஏ.வி.நாகராஜன் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.15% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1315/2019/இ1

தீர்மான எண்.16:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 19.02.2020-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட் சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | காந்திரோடு நகராட்சி ஆரம்பப்பள்ளி கூடுதல் கட்டிடத்தில் பழுதடைந்துள்ள கான்கிரீட் கூரையை உடைத்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கான்கிரீட்கூரை அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 4.50 | 1. எம்.தீனதயாளன்<br><br>2.ஏ.வி.நாகராஜன் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.15% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.1315/2019/இ1
தீர்மான எண்.17:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், நரியம்பட்டு, ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துரை, நதிசீலாபுரம் மற்றும் சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துறை கிணறு, மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்கவும் நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாததால் மேற்படி பணியினை தனியார் மூலம் (Out Sourcing) 16 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு **(எப்ரல்-2019 முதல் மார்ச் -2020 வரை) 12** மாத காலத்திற்கு பணியினை மேற்கொள்ளவும், EPF தொழிலாளர் சேமநலநிதி தொகை செலுத்திடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ.18.25** லட்சத்திற்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
**ந.க.எண்: 518/2020/இ2**
தீர்மான எண்.18:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 எண்ணிக்கை மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தலைமை நீர்ரேற்றும் நிலையங்கள் மற்றும் வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இந்நகராட்சி பகுதிக்கு தினசரி குடிநீர் விநியோகம் மேற்க்கொள்ள நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றுவதை விநியோகம் செய்ய தேவைப்படும் குடிநீர் குழாய் திருகுநர் (வால்வு ஆப்ரேட்டர்) இல்லாத காரணத்தால் தனியார் ஆட்களை கொண்டு இயக்கவும் குடிநீர் விநியோகத்தினை சீராக மேற்க்கொள்ள மேற்படி பணியினை தனியார் மூலம் (Out Sourcing) 16 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு (எப்ரல்-2019 முதல் மார்ச் -2020 வரை) **12** மாத காலத்திற்கு பணியினை மேற்கொள்ளவும், EPF தொழிலாளர் சேமநலநிதி தொகை செலுத்திடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ.18.25** லட்சத்திற்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
**ந.க.எண்: 517/2020/இ2**
தீர்மான எண்.19:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந்நகராட்சியின் 2019-20ஆம் ஆண்டு குடிநீர் கட்டண நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகையினை 31.03.2020-ஆம் தேதிக்குள் 100% வசூல் செய்யும் பொருட்டு நிலுவை மற்றும் நடப்பு தொகையினை செலுத்த கோரி பொதுமக்கனுக்கு துண்டு பிரசுரங்கள் அச்சடித்துக் கொள்ள தீர்மான எண் 87 நாள் 27.12.2019-ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 31.01.2020-ஆம் தேதிவரை குடிநீர் கட்டணம் குறைவாக வசூல் செய்யப்பட்டுள்ளதால் மேலும் கூடுதலாக 25000 எண்ணிக்கை துண்டு

பிரசுரங்கள் அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ22,500/-க்கு (ரூபாய் இருபத்திரெண்டாயிரத்து ஐநூறு மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

1.அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.\

2.குடிநீர் கட்டண வசூல் பணியின் அவசியம் கருதி மேற்படி பணிக்கு எற்கனவே குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ் சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், என்பவருக்கு பணியினை மேற்க்கொள்ள பணி உத்திரவு வழங்க அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 1429/2019/இ2**

தீர்மான எண்.20:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 7 எண்ணிக்கை உயர் கோபுர மின் விளக்குகளில் 400Watts மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதை அகற்றி 200watts LED மின்விளக்குகளை பொருத்துவதால் மின்சேமிப்பு எற்பட்டு மின்கட்டணம் குறையும் எனவே, மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 8.20 லட்சத்திற்க்கு (ரூபாய் எட்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 140/இ2/2020**

தீர்மான எண்.21:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குனர், வேலூர், அலுவலகத்தில் காணொலி காட்சி கட்டமைப்பு (Video conference, infrastructure) மற்றும் இதர கட்டமைப்பு பணிகளை செய்ய நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குனர், வேலூர், அவர்களின் கடிதம் ந.க.எண் 4494/2019/ஆ2 நாள்: 25.10.2019 -ல் ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் மேற்படி பணிக்காகும் செலவுத்தொகையில் தேர்வு நிலை நகராட்சி பங்கு தொகை 8% வழங்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி மேற்கண்ட பணியினை மேற்கொண்ட வகையில் இந்நகராட்சி செலுத்தப்பட வேண்டிய 8% பங்கு தொகை ரூ 3,72,000-/ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்திரெண்டாயிரம் மட்டும்) வாணியம்பாடி நகராட்சிக்கு அனுப்பிவைக்க ஆணையாளர் வாணியம்பாடி நகராட்சி, அவர்களின் கடிதம் ந.க.எண் 2339/2019/இ1 நாள்: 22.01.2020 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி அவர்களுக்கு செலுத்த அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு:**

அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:305/2020/இ2**

தீர்மான எண்.22- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. வேலூர் மாவட்டத்தில் நகராட்சிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்த விபரத்தினை அரசு பொருட்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க அரங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பொருட்காட்சிக்கான மின்கட்டண பங்குத் தொகையாக ரூ 8000/- இந்நகராட்சிக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகை பொருட்காட்சி தொடங்குவதற்க்கு முன்பாகவே செலுத்தப்பட வேண்டியதால் அனைத்து செலவினங்களையும் பேர்ணாம்பட்டு நகராட்சியால் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்க்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பங்குத் தொகை ரூ 8000/-ஐ (ருபாய் எட்டாயிரம் மட்டும்) ஆணையாளர், பேர்ணாம்பட்டு நகராட்சி அவர்களுக்கு அனுப்ப நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குனர், வேலூர், அவர்களின் செயல்முறை ந.க.எண் 5069/2019/ஆ2 நாள்: 06.12.20219 உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி பங்குத் தொகை ரூ 8000/-ஐ ஆணையாளர், பேர்ணாம்பட்டு நகராட்சி அவர்களுக்கு அனுப்பிவைக்க அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:1453/2018/இ2**

தீர்மான எண்.23:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. இந்நகராட்சி அலுவலக அனைத்து தமிழ் கடிதங்களும் வானவில் மென்பொருள் மூலம் தட்டச்சு செய்து அனுப்ப நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இந்நகராட்சி Windows 8 & Windows 10 கணிணிகளுக்கு வானவில் மென்பொருள் இல்லாததால் வானவில் தமிழ் மென்பொருள் நிறுவனத்திடமிருந்து வாங்கி கொள்ளவும், அதற்க்காகும் செலவினத்தொகை ரூ55,000/-க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.211/இ2/2020**

தீர்மான எண்.24:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13. அம்ருத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்ட பணி நடைபெற்றுவருகின்றது. மேற்படி திட்டத்திற்க்காக இந்நகராட்சியின் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கான வரவு மற்றும் செலவின விபரத்தை வருவாய் மேம்படுத்துதல் திட்டத்தின் (Revenue Improvement Plan) கீழ் அறிக்கையினை ADB வங்கிக்கு சமர்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை, அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளதால், மேற்படி, அறிக்கையினை தயாரிக்க ஆகும் செலவினத் தொகை ரூ25000/-க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்படி பணியின் அவசியத்தை கருதி, 02.01.2020-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ (அறிக்கை தயார் செய்து 5 நகல் எடுக்க) |
|---|---|---|
| 1 | எஸ். சரவணன், ஸ்ரீ கம்ப்யூட்டர்ஸ், இன்டர்நெட் சர்வீஸ் & ஜாப் டைப்பிங், பிராட் பஜார். ஆம்பூர். | 25,000.00 |
| 2. | சைபர் கம்ப்யூட்டர்ஸ் & இன்டர்நெட் சர்வீஸ். நேதாஜி ரோடு, ஆம்பூர். | 27,000.00 |
| 3. | பாப்புலர் கம்ப்யூட்டர்ஸ், & ஜாப் டைப்பிங் ஒர்க்ஸ், பிராட் பஜார். ஆம்பூர். | 28,000.00 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. எஸ். சரவணன், ஸ்ரீ கம்ப்யூட்டர்ஸ், இன்டர்நெட் சர்வீஸ் & ஜாப் டைப்பிங், ஆம்பூர் என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 1154/இ2/2019**

தீர்மான எண்.25:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

14. இந்நகராட்சியின் 2019-20 ஆம் ஆண்டு சொத்து வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகையினை வசூல் செய்யும் பொருட்டு நிலுவை மற்றும் நடப்பு தொகையினை உடன் செலுத்த கோரி பொதுமக்கள் அதிகமாக கூடும் 15 இடங்களில் டிஜிட்டல் பேனர்கள் அமைத்து விளம்பரம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ13,000/-க்கு** அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்கண்ட வசூல் பணியின் அவசியத்தை கருதி, 03.02.2020-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ (டிஜிடல் பேணர் ஒன்று பிரிண்டிங் செய்ய (6"X 4")) |
|---|---|---|
| 1 | எஸ். சரவணன் சரவணா டிஜிடல் பிரிண்டிங் ஆம்பூர். | 850.00 |
| 2. | உமா கிராபிக்ஸ் & டிஜிடல் பிரிண்டிங் ஆம்பூர். | 900.00 |
| 3. | ஸ்ரீ சாரதா டிஜிடல் பேணர்ஸ் ஆம்பூர். | 950.00 |

<u>அலுவலக குறிப்பு: 1.</u>மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு.சரவணன், டிஜிடல் பிரிண்டிங் என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

3 மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 1244/அ1/ 2019**

தீர்மான எண்.26:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

15. ஆம்பூர் நகராட்சியின் சார்பாக பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து இந் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விவரங்களை கீழ்குறிப்பிட்டுள்ள நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணத்தை கீழ்கண்டவாறு அந்தந்த நாளிதழ்களுக்கு வழங்க அங்கீகாரம் கோராப்படுகிறது.

| வ.எண். | நாளிதழ் பெயர் | விளம்பர கட்டணத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினதந்தி | 23940/- |
| 2 | தினமணி | 25200/- |
| 3 | மாலை முரசு | 13650/- |
| 4 | மாலை மலர் | 18900/- |
| 5 | தினமலர் | 22050/- |
| 6 | தினகரன் | 24780/- |
| 7 | தின செய்தி | 9000/- |

அலுவலக குறிப்பு:- அ.அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கெள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.441/2019/இ1

தீர்மான எண்.27:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

16. ஆம்பூர் நகராட்சியில் சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2020ம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலுக்காக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வார்டு எல்லைகள், வார்டு மறுவரையறை செய்யப்பட்ட விவரங்களை, நகர வரைப்படத்தில் பதிவிட்டு மற்றும் 36 வார்டுகளுக்கு, வார்டுகள் வாரியக வரைப்படங்கள் கீழ கண்டவாறு Auto Cadd மென்பொருள் மூலம் தயார் செய்து அவற்றை A2 & A3 அளவிளான கலர் பிரிண்ட் ஆகிய பணிகளை முடித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளதால் மேற்படி பணிகளை முடிக்க ஆகும் தோராய செலவினம் தொகை ரூ:1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது. மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்னனுமதி பெற்று 10.02.2020-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ:எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளிகளின் விவரம் | | |
|---|---|---|---|---|
| | | ஜெ.துரை முருகன் லட்சுமி பில்டர்ஸ், ஆம்பூர். | எஸ்.எஸ்.கன்ஸ்டிரக்சன் & பில்டிங் பிளனர்ஸ், ஆம்பூர். | எஸ்.சசிகுமார் குமார் பில்டர்ஸ் ஆம்பூர். |
| 1 | Town Map Auto CADD Drawing Preparation (1 Hours) | 1450/- | 1550/- | 1600/- |
| 2 | Town Map A2 Size Color Print (1Nos) | 350/- | 375/- | 400/- |
| 3 | Ward Map A3 size color Print (1Nos) | 105/- | 120/- | 130/- |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப்புள்ளியினை வழங்கியுள்ள திரு.துரைமுருகன், லட்சுமி பில்டர்ஸ், ஆம்பூர் என்பவரது விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. மேலும் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண்.1312/2017/எப்1)
தீர்மானஎண்.28-அலுவலககுறிப்புஅங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி